THE HINDU-ENGLISH
Dated: 22. 01. 2025

# SC asks if poll ban on persons causes harm

Krishnadas Rajagopal
NEW DELHI

The Supreme Court on Tuesday asked whether a ban on persons charged with heinous offences such as murder and rape from contesting elections will lead to irreversible damage if they are later found innocent after trial.

A Bench of Justices Surya Kant and N. Kotiswar Singh said there were also reliefs in law if elected persons were later found guilty of serious crimes.

Petitioner-advocate Ashwini Kumar Upadhyay submitted that the right to campaign and contest were not fundamental rights.

Justice Kant asked how many honest people come forward to contest, stressing national introspection.

The petition will be heard on January 27.

TIMES OF INDIA
Dated: 22.01.2025

# U'khand cabinet nod on UCC manual doesn't violate poll code: Dhami refutes Cong charge

Manash.Gohain
@timesofindia.com

**New Delhi:** Uttarakhand CM Pushkar Singh Dhami has rejected Congress's criticism that the state cabinet's decision Monday to approve rules for implementation of Uniform Civil Code was violative of the model code of conduct currently in force because of local body polls and said he would soon come out with the date of implementation.



Congress' opposition of UCC was motivated by vote-bank politics, Utttarakhand CM Dhami said

"UCC for Uttarakhand has been a work in progress since we promised it in our manifesto in 2022. Our commitment is absolute. Our first task was to draft it. It has since received the President's assent. We are in the final stages of training our employees and will soon announce the implementation date," Dhami told **TOI**.

Congress has complained to EC about the state cabinet's decision. The confrontation can only sharpen the fight between Congress and BJP in local body polls. Dhami has plunged himself headlong into the battle in what appears to be a gambit.

BJP circles see it as a well-calculated one and reflective of the CM's confidence that his image as a "doer" and his accessibility will work to the party's advantage. BJP had won all five Lok Sabha seats in June 2024. While the third consecutive sweep of LS polls is unanimously attributed to PM Modi's enduring popularity in the hills, many in the party feel Dhami's toil was an important factor in the win in the bypoll for the Kedarnath seat.

It was a tough contest and a defeat, coming after the party's loss of Faizabad LS seat under which Ayodhya comes, would have compounded the embarrassment. It would have been a personal setback also for the CM.

On whether approval of rules during the campaign was meant to insert UCC as an issue in elections, Dhami said, "It has been an issue since we put it on the manifesto, resulting in Uttarakhand becoming the first state after Goa to have a UCC."

He said Congress's opposition was motivated by vote bank considerations. "Opposition has worked to disrupt the state's demographic balance. Our double-engine govt is committed to preserving Devbhoomi's rich culture and traditions," he said.

DECCAN CHRONICLE
Dated: 22.01.2025

# 'Parties must have code of conduct for MPs & MLAs'

DC CORRESPONDENT
NEW DELHI, JAN. 21

As the Budget Session of Parliament, commencing next week, is expected to be stormy, Lok Sabha Speaker Om Birla on Tuesday said that the tradition of barrier-free, orderly discussion and smooth communication should be maintained in legislatures. The Speaker also urged political parties to devise a code of conduct for their legislators to uphold the dignity of their respective Houses.

Mr Birla emphasised that it should be the endeavour of all presiding officers to ensure no disruptions occur in the Houses despite agreements and disagreements. "Our houses should perform their functions in a better environment, serving the wider public interest, enabling us to contribute more effectively to public service and good governance by fulfilling our constitutional responsibilities through our houses," he said while addressing the valedictory session of the 85th All India Presiding Officers Conference in Patna.

D.T.NEXT
Dated: 22.01.2025

# Erode bypoll: K'taka woman's papers rejected

**COIMBATORE: Following opposition from three independents, the poll authorities rejected the nomination of a woman candidate from Bengaluru to contest Erode East bypoll, as she was not a registered voter in Tamil Nadu.**

The number of contestants in the fray has been revised to 46 from 47, after this decision. Highlighting that V Padmavathi was not a registered voter in the State, three independents K Padmarajan, A Noor Muhammed, and Agni Aalvar raised an issue, leading to the decision of the Returning Officer.

The issue came up after Returning Officer and Corporation Commissioner N Manish declared the final list of candidates contesting the bypoll following the scrutiny process and withdrawal of nominations. Eventually, the Election Commission (EC) rejected her nomination and the final revised list was released around 1.30 am.

Meanwhile, in a sudden turn of events expelled AIADMK leader B Senthil Murugan joined DMK in the presence of Minister for Housing and Urban Development S Muthusamy, on Tuesday.

The next day after withdrawing nominations for the Erode East bypoll, the AIADMK former functionary jumped the ship.


TIMES OF INDIA

Dated: 22.01.2025

# Paisa For Your Vote

*Delhi elections show politics of free cash is out of control now*

It's promising to rain cash in Delhi. BJP yesterday offered a one-time ₹15k payout for civil services' aspirants and fee & travel expenses reimbursed for two attempts. AAP's pledged to pick up autowallah wards' tuition tab for entrance exams, and ₹1L for a daughter's wedding. AAP, BJP and Congress's pledges include monthly dole – to women (AAP: ₹2.1k, BJP & Congress both ₹2.5k), to temple priests and gurdwara granthis (AAP: ₹18k), to SC students at vocational institutes (BJP: ₹1k), to elderly (BJP: ₹2.5k for ages 60-70 & ₹3k for 70+). BJP has offered ₹21k to pregnant women. Congress promises ₹8.5k stipend to jobless youth for a year, along with apprenticeships. Of course, the devil is always in the eligibility criteria that crop up post polls. But that's not the point.




Political parties are shifting to an electoral model that prioritises private benefit over delivering public good. This has grievous implications – both for democratic tenets and the economy. For one, we're seeing the flip side of successful direct cash transfer tech that has permanently altered how the state interacts with citizens. It's boiling down to a quid pro quo between political parties and citizens – govt a via media, elected representatives dipping into state coffers and cutting back on fundamentals, for where is the incentive to do otherwise, given electoral politics has morphed into an end in and of itself.

Second, where will the funds for this largesse come from? At the expense of govt programmes, as Gadkari said would be the case in Maharashtra – subsidies may suffer to service women's handout. Delhi's rich. Per capita income is ₹4.62L. Its budget was ₹76k cr this fiscal. Yet, midday meal cooks are paid a paltry ₹1k a month, way less than minimum wages. Instead of establishing fair wages for key service delivery, politicians want 'women' to queue up for ₹2k+. Govt's turning into a charity for the masses in the garb of welfare. The country simply can't afford it. Elections in Bihar are next. Imagine the havoc such a cash circus might wreak.

THE HINDU - TAMIL

Dated: 22.01.2025

# பெங்களூரு சுயேச்சை வேட்பாளர் மனு நள்ளிரவில் தள்ளுபடி

## ஈரோடு கிழக்கில் 46 வேட்பாளர்கள் போட்டி

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட மனு தாக்கல் செய்திருந்த பெங்களூருவைச் சேர்ந்த சுயேச்சை வேட்பாளர் பத்மாவதியின்வேட்புமனுநேற்றுமுன்தினம் நள்ளிரவு தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து, ஈரோடு தேர்தல் களத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 46-ஆக குறைந்துள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி வாக்குப்பதிவு பிப்.5-ம் தேதி நடைபெற உள்ள நிலையில், 58 வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்திருந்தனர். 3 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 8 வேட்பாளர்கள் மனுக்களைத் திரும்பப் பெற்றனர். இதையடுத்து, திமுக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 47 பேர் போட்டியிட உள்ளதாக தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் நேற்று முன் தினம் மாலை தெரிவித்தார்.

தொடர்ந்து, வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடந்தது. திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு உதயசூரியன், நாதக வேட்பாளர் சீதாலட்சுமிக்கு மைக் சின்னம் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியினர் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடந்தது.

அப்போது, கர்நாடக மாநிலம் பெங்களூரு கே.ஆர்.புரம் சட்டப் பேரவைத் தொகுதியைச் சேர்ந்த வி.பத்மாவதி என்ற சுயேச்சை வேட்பாளரின் மனு ஏற்கப்பட்டதற்கு, சுயேச்சை வேட்பாளர்கள் நூர் முகமது, அக்னி ஆழ்வார், பத்மராஜன் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்து, தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பெங்களூருவைச் சேர்ந்த சுயேச்சை வேட்பாளர் பத்மாவதியின் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட சுயேச்சை வேட்பாளர்கள் நூர்முகமது, பத்மராஜன், அக்னி ஆழ்வார்.



பத்மாவதி

தேர்தல் ஆணைய விதிமுறைகளின்படி, மக்களவை, மாநிலங்களவைக்கு எந்த மாநிலத்தில் இருந்தும் போட்டியிடலாம். ஆனால், சட்டப்பேரவைத் தொகுதிக்கு அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் மட்டுமே போட்டியிட முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி அலுவலகத்துக்கு வந்து, ஆலோசனை நடத்தினார். மேலும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருடனும் ஆலோசனை நடத்தினார்.

நள்ளிரவு வரை வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. பின்னர், சுயேச்சை வேட்பாளர் பத்மாவதியின் வேட்புமனு தள்ளுபடி செய்யப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, தேர்தலில் போட்டியிடும் 46 பேரின் விவரங்கள் மாநகராட்சி அலுவலகத்தில் ஒட்டப்பட்டன.

### அமைச்சர் விளக்கம்

ஈரோட்டில் நேற்று திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொண்ட அமைச்சர் முத்துசாமி, “நாம் தமிழர் கட்சிப் பிரச்சாரத்தில் தலையிடுவதோ, தடுப்பதோ எங்கள் நோக்கமில்லை. இடைத்தேர்தலை தேர்தல் ஆணையம் தான் நடத்துகிறது. எனவே, எங்கள் மீது யாரும் குறை கூறக்கூடாது. பிரச்சாரத்தின்போது ஆரத்தி எடுப்பதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ பணம் கொடுப்பது தவறு. திமுகவினர் இவற்றை செய்யக்கூடாது என்று வலியுறுத்தி வருகிறோம்” என்றார்.

### திமுகவில் இணைந்த சுயேச்சை


இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக அதிமுக அறிவித்திருந்த நிலையில், ஈரோடு மாநகர எம்ஜிஆர் இளைஞரணி இணைச் செயலாளர் செந்தில் முருகன் சுயேச்சையாக மனு தாக்கல் செய்ததால், கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் வேட்புமனுவைத் திரும்பப் பெற்ற அவர், நேற்று காலை அமைச்சர் முத்துசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தார். திமுக வேட்பாளர் சந்திரகுமாரை ஆதரித்துப் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

DAILY THANTHI

Dated: 22.01.2025

# 46 வேட்பாளர்கள் களத்தில் இருப்பதால் 3 ஓட்டு எந்திரங்கள் தேவை



சென்னை, ஜன.22-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் இருப்பதால் வாக்குச் சாவடிக்கு தலா 3 ஓட்டு எந்திரங்கள் தேவையாக உள்ளது. மேலும், அங்கு தி.மு.க. - நாம் தமிழர் கட்சி இடையே நேரடி மோதல் ஏற்பட்டுள்ளது.

### வேட்புமனுவில் சிக்கல்

ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் கடந்த மாதம் (டிசம்பர்) 14-ந் தேதி மரணம் அடைந்த நிலையில், அந்தத் தொகுதியில் பிப்ரவரி 5-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. கடந்த 10-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை பொங்கல் விடுமுறை நீங்கலாக நடைபெற்ற வேட்புமனு தாக்கலின்போது மொத்தம் 58 பேர் போட்டியிட விருப்பம் தெரிவித்து மனு அளித்தனர்.

அதில், 3 பேரின் மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், 8 பேர் தங்கள் மனுக்களை வாபஸ் பெற்றதால், 47 பேர் போட்டியிடும் நிலை இருந்தது. ஆனால், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியான நேற்று முன்தினம் பத்மாவதி என்ற சுயேச்சை வேட்பாளரின் மனுவை ஆராய்ந்தபோது சிக்கல் இருப்பது தெரிந்தது.

### களத்தில் 46 பேர்

அவர் கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவராக இருந்ததால், அவரது வேட்புமனு நீண்ட நேரத்துக்கு பிறகு நிராகரிக்கப்பட்டது. இதுகுறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், "தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் வெளிமாநிலத்தை சேர்ந்த வாக்காளர்கள் போட்டியிட முடியாது. பத்மாவதியின் ஓட்டு கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜபுரம் தொகுதியில் உள்ளது. இதை அவர் வேட்பு மனுவிலும் குறிப்பிட்டு உள்ளார். எனவே இந்த காரணத்தை அடிப்படையாக வைத்து பத்மாவதியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது", என்றனர்.

இறுதியில் 46 பேர் களத்தில் இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. உடனடியாக, வேட்பாளர்களுக்கான சின்னமும் ஒதுக்கப்பட்டது.

தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியான தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு 'உதயசூரியன்' சின்னமும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமிக்கு 'மைக்' சின்னமும் ஒதுக்கப்பட்டது. ஏனைய 44 வேட்பாளர்களுக்கு சுயேச்சை சின்னங்கள் ஒதுக்கப்பட்டன.

### தி.மு.க. - நாம் தமிழர் கட்சி இடையே போட்டி

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. - நாம் தமிழர் கட்சி இடையேதான் போட்டி நிலவுகிறது. அ.தி.மு.க., பா.ஜனதா, தே.மு.தி.க. புறக்கணித்த நிலையில், முடிவு ஒருதலை பட்சமாகவே இருக்கும் என்பதால், பெரிய அளவில் பரபரப்பு இல்லை.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்கள் வாக்களிப்பதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. அதில், பி.பி. அக்ரஹாரம், ராஜாஜிபுரம், வளையக்கார வீதி, மகாஜன பள்ளி ஆகிய 4 இடங்களில் உள்ள 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

### 3 வாக்குப்பதிவு எந்திரங்கள் தேவை

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் மொத்தம் 46 பேர் களத்தில் உள்ளனர். வாக்கு எந்திரம் ஒவ்வொன்றிலும் 16 வேட்பாளர்களின் பெயர்களையும், சின்னங்களையும் பொருத்த முடியும். கடைசி பொத்தான் நோட்டாவுக்கு ஒதுக்கப்படும். அதாவது, வேட்பாளர்கள் யாருக்கும் வாக்களிக்க விரும்பாதவர்கள் இந்த பொத்தானை அழுத்தி தனது எதிர்ப்பை பதிவு செய்யலாம்.

வேட்பாளர்களை வைத்து பார்க்கும்போது, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 3 வாக்குப்பதிவு எந்திரங்கள் தேவைப்படுகின்றன. அந்த வகையில், 711 வாக்குப்பதிவு எந்திரங்களும், அதற்கு ஏற்ற வகையில், கட்டுப்பாட்டு கருவிகளும் பயன்படுத்தப்பட உள்ளன. ஒரு கட்டுப்பாட்டு கருவியுடன் 5 வாக்குப்பதிவு எந்திரங்களை இணைக்கமுடியும்.

### அச்சடிக்கும் பணி

வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்துவதற்காக, காகிதத்தில் அச்சடிக்கும் பணி நடந்து வருகிறது. அந்தப் பணிகள் முடிந்தவுடன் வாக்குப்பதிவு எந்திரத்தில் பொருத்தப்படும். தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## இடைத்தேர்தலுக்காக பிப்ரவரி 5-ந்தேதி பொது விடுமுறை

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி பிப்ரவரி 5-ந் தேதியை பொது விடுமுறையாக அறிவித்து தலைமைச் செயலாளர் முருகானந்தம் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

மத்திய உள் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் அறிவிப்பாணைப்படி, இடைத்தேர்தல் நடைபெறும் பிப்ரவரி 5-ந் தேதியன்று ஈரோடு கிழக்கு தொகுதிக்கு பொது விடுமுறை அறிவிக்கப்படுகிறது. அதன்படி, அந்தத் தொகுதியில் உள்ள அரசின் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகளின் அலுவலகங்கள் அனைத்தும் பிப்ரவரி 5-ந் தேதி மூடப்பட வேண்டும்.

அந்த தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பணியாற்றும், ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்களாக உள்ள பணியாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.